







# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 1 இதழ் 27 2.07.2025



# உள்ளே....

## படித்து பின்பற்ற வேண்டிய

## முத்துக்கள்

## உபதேசங்கள்



# முத்துக்கள்

1. மனத்தினால் நல்லகாரியம் செய்யவேண்டுப. கொஞ்சநாழிகை ஓரிடத்தில் இருக்கவேண்டும். பசுவானை த்யானம் செய்யவேண்டும். நம்முடைய மனது பல நினைவுகளோடு இருக்கிறது. அது பெரிய ஸினிமாவைப்போல் இருக்கிறது. ஹ்ருதயம் யாருடைய இடம் என்பதை அறியவேண்டும்.
2. ஹ்ருதயம் பகவானுக்குரிய இடம். அந்த இடத்தை நாம் குப்பைத்தொட்டியாக்கி இருக்கிறோம். அதை மெழுகிச் சுத்தப் படுத்தி, அதிற் பகவானை உட்காரவைத்து நாமும் உட்காரவேண் டும். அதற்கு என்ன வழி ? ஸ்வாமியின் பாதத்தை த்யானம் செய்யவேண்டும். நித்தியப் ஐந்து நிமிஷமாவது த்யானம் செய்ய வேண்டும். எந்தவிதமான ஸமயத்திலும் இது தவறாமல் நடக்க வேண்டும். இது சாப்பிடுவதைப் போன்றது. இது ஸ்வராஜ்யத்தை விட அதிகமென்றே சொல்லவேண்டும். ஆகாரம் செல்லாத காலத் திலும் இது அவச்யம் செய்யவேண்டியது. அப்பொழுது ஈச்வர அனுக்ரஹம் உண்டாகும். அந்த அனுக்ரஹம் எல்லாவற்றிற்கும் அனுகூலம். பணம் ஸம்பாதிக்க எவ்வளவோ காலத்தைப் போக்கு கிறோம். நமக்கு உண்மையில் ஆத்மலாபமாக இருக்கும் இந்தங். காரியத்தை குறைந்த பக்ஷம் அரை மணியாவது செய்யக்கூடாதா? அந்த அரை மணியும் தர்மப் பணத்தைச் சேர்க்கும் காலமாகும். மனம் த்யானத்தில் ஈடுபட்டால் வாய் முதலியன அதன்படியே நல்ல காரியம் செய்யும். உடம்பினால் நல்ல கார்யம் செய்யவேண்டும். கோயிலுக்குப் போய் ப்ரதக்ஷிணம் செய்து நமஸ்காரம் செய்யவேண்டும். தண்டம் ஸமர்ப்பித்தல் என்று நமஸ்காரத்தைச் சொல்லுவார்கள். தடியைப் போல் விழுவது தான் அது. இந்த உடம்பு நமதன்று அவரது என்று நினைத்து அவர் ஸந்நிதியிற் போட்டுவிடவேண்டும். இப்படிச் செய்வதனால் பாபம் தானாக நழுவி விடும். அஹம் பாவம் குறையும். எவ்வளவுக்கெவ்வளவு நாம் இரங்குகிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு மஹிமை ஏறும்.
3. இராமாயணம் நமக்குக் கற்றுக்கொடுப்பது என்ன வென்றால் (1) மனம் = ராவணன்; (2) இந்திரியங்கள் = பத்துத் தலைகள்; (3) உடல் (சரீரம்) = இலங்கை; (4) மனம் உடலை ஆள்கிறது = ராவணன் இலங்கையை ஆள்கிறான். இலங்கை என்னும் இடத்தில் ஸீதை என்னும் ஜீவன் சிறைபடுத்தப்பட்டு, மனம் என்னும் ராவணனால் துன்புறுத்தப்படுகிறாள். இதனை ஸஹியாத ஆயிரம் தாய் தந்தையரைக் காட்டிலும் மேலான இரக்கம் கொண்ட பகவான், அனுமான் எந்னும் ஆசார்யனை அனுப்பி, ஆறுதல் அளித்து, பின்பு ஆத்மாவை சிறையினின்றும் மீட்கிறான்.
4. ஆசார்யன் என்பர் - ஸ்ரீய:பதியான ஸ்ரீமந் நாராயணன். சேதனர்கள் எல்லாரும் ஸப்தாதி விஷயங்களில் (லோகத்தில் ஐம்புலன்களால் அறியப்படும் விஷயங்களில்) ஊன்றி மாறி மாறி பல பிறப்பும் பிறந்து, ஸம்ஸாரக் கடலில் உழல்வதைக் கண்டு

வருந்தி, தானே பல அவதாரங்கள் செய்து, தர்ம வழியில் நடந்து காட்டியும், தர்மோபதேசம் செய்தும், திருத்த முயன்றான். அவ்வளவிலும் திருத்தமுடியாமல், இவர்களைத் திருத்தும் வழி யாதென்று தீர ஆலோசித்து, மிருகம் பிடிப்பவர் அந்த இனத்தைச் சேர்ந்த மிருகத்தையே கொண்டு பிடிப்பார்போலே, பஞ்சாயுதங்களையும், ஸ்ரீவத்ஸ கௌஸ்துப சின்னங்களையும் லோகத்தில் மனித ரூபத்தில் அவதரிக்கச் செய்து, ஸம்ஸாரிகளை ஸம்ஸாரப் பெருங்கடலினின்றும் கரையேற்றுங்கள் என்று ஆணையிட்டு, அவர்களை பூலோகத்தில் அவதரிக்கச் செய்தார். அவர்களே ஆழ்வார்களாகவும், ஆசார்யர்களாகவும் அவதரித்து, வேதம், உபநிஷத்துக்கள், இதிஹாஸ புராணங்கள் மற்றும் வேதாந்தசாரங்களை சேதனர்களுக்கு உபதேசித்து, பரமாத்மாவைக் காட்டித்தந்தார்கள். அவனை அடையும் உபாயங்களையும் போதித்தார்கள். ஆக ஆசார்யன் என்பவர் பரமாத்மாவுக்கும் ஜீவனுக்கும் இடையே ஒரு பாலமாக நின்று ஜீவனுக்கு நல்வழி காட்டி பகவானைக் காட்டிக்கொடுப்பவர்.

அடையார் கமலத்து அலர்மகள் கேள்வன் - கையாழியென்னும்
படையோடு நாந்தகமும் படர் தண்டும் ஒண் சார்ங்கவில்லும்
புடையார் புரிசங்கமும் இந்தப் பூதலம் காப்பதற்கென்று
இடையே இராமாநுஜமுனியாயின இந்நிலத்தே. -------------இராமாநுஜ நூற்றந்தாதி -33

---

மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து, எங்கள் மாதவனே
கண்ணுற நிற்கிலும் காணகில்லா - உலகோர்களெல்லாம்
அண்ணல் இராமாநுஜன் வந்து தோன்றிய அப்பொழுதே
நண்ணரு ஞானம் தலைக்கொண்டு நாரணற்காயினரே.

---

---------இராமாநுஜ நூற்றந்தாதி ...... 41

## 5. ப்ராப்யஸ்வரூபம்

**(i) லக்ஷ்மியோடு கூடியது**

ப்ராப்யமான பரமாத்ம ஸ்வரூபத்தை எப்படி அநுஸந்திக்க வேண்டும் என்பதை நாம் நன்கு அறியவேண்டும்.

முதலில் பரமாத்மாவை ஸர்வப்ரகாரத்தாலும் ஸர்வாவஸ்தையிலும் ஸஹதர்மசாரிணியான பெரிய பிராட்டியாரோடு பிரிவில்லாதவனாக அநுஸந்திக்க வேண்டும்.

எம்பெருமான் ஜகத்ஸ்ருஷ்டிக்காக ஸங்கல் பிக்கும் போதும் அவதரிப்பதற்காக ஸங்கல்பிக்கும் போதும் பெரிய பிராட்டியாரும் (ஸ்ரீலக்ஷ்மியும்) அந்தந்த ஸமயத்திற்கு ஏற்ப ஸங்கல்பிக்கிறாள்.

இதுதான் ஸர்வப்ரகாரத்தாலும் பெரிய பிராட்டியாரோடு பிரிவில்லாமல் இருக்கை.

இனி ஸர்வாவஸ்தையிலும் பெரிய பிராட்டியாரோடு பிரிவில்லாம லிருக்கையாவது பர, வ்யூஹம், விபவம், அர்ச்சை, அந்தர்யாமி என்ற ஐவகை அவஸ்தைகளிலும் (நிலைகளிலும்) பெரியபிராட்டியாரோடு பிரிவில்லாம லிருக்கையேயாம்.

இங்கு இவளை ஸஹதர்மசாரிணி (எம்பெருமானுடன் இருந்து அவன் அநுஷ்டிக்கும் தர்மத்தைத் தானும் அனுஷ்டிப்பவள்) என்று குறிப்பிட்டிருப்பதால், எம்பெருமான் உபாயம் ஆகும்போது தானும் உபாயமாய் இருக்கையும், அவன் உபேயமாகும் (பலமாகும்) போது தானும் பலமாய் இருக்கையும், அதாவது நாம் செய்யும் கைங்கர்யங்களை அவன் ஸ்வீகரிக்கும்போது அவளும் அப்படியே இருக்கிறாள் என்பதும் கூறப்பட்டதாகிறது. இதனால் திருவில்லாதவர்கள் தேவன் ஆக மாட்டார்கள் என்று கூறப்பட்டதாகிறது.

6. **பத்தர்** (बद्धर् ) என்பவர் தாம் அநாதிகாலமாகச் செய்து வரும் புண்ய பாபங்களாகிற கர்மாக்களின் ப்ரவாஹத்தினால் (பெருக்கினால்) தொடர்ந்து வரும் ஸம்ஸாரபந்தத்தால் கட்டுண்டவர்கள் ஆவர். சதுர்முகன் முதல் சிறு கோரப்புல் ஈறாக உள்ள பல வகைப்பட்ட சரீரங்களைக் கொண்ட ஜீவர்கள் யாவருமே பத்தர்களாவார். இந்த உண்மையை உணர்ந்தால் நம்மைப் போல் கர்மபாசத்தால் கட்டுண்டு உழலும் ப்ரஹ்மா ருத்ரன் போல்வாரை ஈஸ்வரன் என்று நினைப்பதும் கூடாதொழியும்.

   **முக்தர்** என்பவர் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டுள்ள பக்தி, ப்ரபத்தி என்ற உபாயங்கள் இரண்டினுள் ஒன்றைத் தம் பாக்திக்கு ஏற்ப அனுஷ்டித்து, அதனால் மீண்டும் ஸம்ஸாரபந்தம் தொடராதப்படி அடியோடு அதனின்றும் விடுபட்டவர் ஆவார். அதனால் குறைவற்ற பரிபூர்ணமான பகவதநுபவத்தினால் உண்டான உயர்வற்ற எல்லையில்லாத பேரானந்தத்தைப் பெற்றிருப்பார்கள்.

   **நித்யர்கள்** என்பார் பகவானைப் போலே அநாதிகாலமாகவே ஜ்ஞாநத்தினால் குறை ஏதுமின்றி ஒருவயஸ்ஸில் தோழன்மார்களைப் போலே ஒரு காலத்திலும் ஸம்ஸார ஸம்பந்தம் தீண்டப்பெறாதவர்களாய் பரமபதத்தில் எம்பெருமானுக்கு நித்ய கைங்கர்யம் செய்துவரும் ஆதிசேஷன், கருடன், விஸ்வக்ஸேநர் முதலானோர் ஆவார்.

7. **தர்மபூத ஜ்ஞாநம் என்ன செய்கிறது** .
இந்த தர்மபூத ஜ்ஞாநம்
(1) விஷயங்ளை ப்ரகாசப்படுத்துகிறது.
(2) ப்ரயத்னம் என்ற நிலையை அடைந்து சரீரம் இந்த்ரியங்கள் முதலியவற்றைத் தம் தம் கார்யங்களில் ஈடுபடுத்துகிறது.
(3) பத்ததசையில் சில ஸமயங்களில் விஷயங்களுடன் ஸம்பந்தப்படுகிறது. மற்றும் சில ஸமயங்களில் ஸம்பந்தப்படாமல் இருக்கிறது.
(4) 'உலகப்' பொருள்களில் உள்ள ஆநுகூல்ய-ப்ராதிகூல்யங்களை அதாவது நன்மை-தீமைகளைக் காட்டும் வகையில் (ம்) என்ற நிலையை அடைகிறது. இவையே தர்ம பூதஜ்ஞாநத்தின் ப்ரவ்ருத்திகள். இவற்றை நன்கு அறிய வேண்டும். நம் ஸித்தாந்தங்கள் - உண்மைகள் பல இவற்றுள் அடங்கியுள்ளன.

8. **வ்யூஹ மூர்த்திகள் வாஸுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அநிருத்தன் என்று நால்வகைப்படும்**. இதே நால்வருள் வாஸுதேவன் ஜ்ஞானம், பலம் முதலான ஆறு குணங்களோடும் விளங்குகிறான். மற்றைய ஸங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அநிருத்தன் ஆகிய மூவரும் முன் கூறிய ஆறுகுணங்களுள் இரண்டு இரண்டாகக் கொண்டு ப்ரகாசிக்கிறார்கள்.

9. **ஸங்கர்ஷணன்** என்ற வ்யூஹமூர்த்தியான பகவான் ஜ்ஞாநம், பலம் என்ற இரண்டு குணங்களோடு ப்ரகாசிக்கிறான். **ப்ரத்யும்னன்** என்ற வ்யூஹ மூர்த்தியான பகவான் ஐஸ்வர்யம், வீர்யம், என்ற இரண்டு குணங்களோடு ப்ரகாசிக்கிறான். **அநிருத்தன்** என்பவன் சக்தி - தேஜஸ் என்ற இரண்டு குணங்களோடு ப்ரகாசிக்கிறான்.

10. **ஸ்ரீபகவத்கீதை (அத்4, ச்லோ 4-7)**
இந்த நான்கு ஸ்லோகங்களும் சேர்ந்து **ஏழு அர்த்த விசேஷங்கள்** கூறப்படுகின்றன என்று காட்டியருளுகிறார் ஸ்வாமி ஸ்ரீதேசிகன். அவை பின்வருமாறு:
1. அவதாரங்கள் எல்லாம் ஸத்யங்கள் (இது கீழே விளக்கப்பட்டது)
2. இவற்றில் ஈஸ்வரனுக்கு ஜ்ஞாநம் முதலியவற்றின் ஸங்கோசம் (குறைவு) கிடையாது.
3. இந்த விக்ரஹங்கள் (திருமேனிகள் - சரீரங்கள்) சுத்த ஸத்த்வம் என்ற த்ரவ்யத்தினால் ஸ்ருஷ்டிக்கப்பட்டவை. ஸ்ருஷ்டிக்கப்பட்டவையல்ல. ப்ரக்ருதியினால்
4. இந்த அவதாரங்களுக்குக் காரணம் எம்பெருமானுடைய ஸங்கல்பமே தான். கர்மா காரணம் அன்று.
5. தர்ம ரக்ஷணம் பண்ண வேண்டிய காலத்தில் தான் இந்த

அவதாரங்கள் நிகழ்கின்றன; ஆகவே தர்மரக்ஷணம் பண்ண வேண்டிய காலந்தான் அவதாரத்திற்கு உரிய காலமாகும். நம்முடைய பிறவிகளுக்குக் கர்மபலம் அநுபவிக்க வேண்டிய காலமே காலமாவது போல் அன்று, எம்பெருமானுடைய அவதாரத்திற்கு உரிய காலம்.

6. எம்பெருமான் அவதரிப்பதற்கு ப்ரயோஜநம் அதாவது பலன் ஸாதுக்களைக் காப்பதும்; துஷ்டர்களை அழிப்பதும், தர்மத்தை நிலை நாட்டுவதுமேயாகும்; அதாவது ஸாதுக்களை ரக்ஷித்து துஷ்டர்களை அழித்துத் தர்மத்தை நிலை நாட்டுவதற்காகவே எம்பெருமான் அவதரிக்கிறான். நம்மைப்போல் கர்மபலன்களை அநுபவிப்பதற்காகப் பிறக்கிறான் என்பதில்லை என்றவாறு.
7. எம்பெருமானுடைய திரு அவதாரத்தில் அடங்கியுள்ள இந்த ஆறு ரஹஸ்யார்த்தங்களை நன்கு கற்றுத் தெளிந்து அநுஸந்திப்பவர்கள், இந்த ஒரு பிறவிலேயே தங்கள் தகுதிக்கு அதாவது யோக்யதைக்கு ஏற்ப பக்தியோகத்தையோ அல்லது ப்ரபத்தியையோ அனுஷ்டித்து மறுபிறவி இல்லாமலேயே மோக்ஷம் பெற்று எம்பெருமானை அடைவார்கள்.

8. **சத்ருக்களை அழிக்கும் ஆற்றல்** எம்பெருமானுக்குத்தான் என்றால் பிராட்டிக்கு இது இல்லை என்று நினைக்க வேண்டாம். அவளுக்கும் அந்த ஆற்றல் உண்டு. ஆனால் அவள் அதைப் பயன்படுத்துவதில்லை. ஶ்ரீராமாயணத்தில் ஸுந்தரகாண்டத்தில் ஸீதை ராவணனை நோக்கிக் கூறும் ஸ்லோகத்திலிருந்து இதை அறியலாம்.

असन्देशात्तु रामस्य तपसश्चानुपालनात् ।
न त्वा कुर्मि दशग्रीव ! भस्य भस्माई तेजसा ।।
அஸந்தேஸாத் து ராமஸ்ய தபஸய்சாநுபாலநாத் |
ந த்வா குர்மி தஸக்ரீவ ! பஸ்ம பஸ்மார்ஹ தேஜஸா ||

ஹேோ ராவணா! நீ செய்யும் பாபத்தின் பலனாய் நானே உன்னை அழித்து விடுவேன். உன்னைச் சாம்பலாக்குவதற்கு ஏற்ற தேஜஸ், ப்ரபாவம் எனக்கு உண்டு. ஆயினும் நான் உன்னைச் சாம்பலாக்கவில்லை. காரணம் என்ன தெரியுமா! நான் பர்த்தாவுக்கு அடங்கியிருப்பவள்; சத்ருக்களை அழிக்கும் செயல் அவனுக்கே என்று பகிர்ந்து கொண்டுள்ளோம். ஆகவே உன்னை நான் அழிப்பதில் அவனுடைய உத்திரவு இல்லை. நான் ஸ்வதந்த்ரையாய் உன்னை அழித்தால் என்னுடைய தபஸ்ஸுக்கு அழிவு ஏற்படும். அதை காக்க வேண்டும். ஆகவே என்னுடைய பதிபாரார்த்யத்தை பர்த்தாவுக்காகவே இருப்பதாகிற வ்ரதத்தைக் காப்பதற்காகவே உன்னைச் சாம்பல் ஆக்கவில்லை என்கிறாள்.

இதனால் என்ன ஏற்படுகிறது? உலகில் உள்ள ஸ்த்ரீகளைப் போல் கையாலாகதா தன்மையினால் அதாவது முடியாமையினால் - அசக்தியினால் பர்த்தாவைக் கொண்டு ராவண ஸம்ஹாரம் செய்விக்கிறாள் என்பதில்லை. **ஆகவே சத்ருக்களை அழிக்கும் ஆற்றல் பிராட்டிக்கும் உண்டு. ஆனால் அதைப் பயன்படுத்துவதில்லை.**

